சற் குருப்யோ நம:

திரு ஆமாத் தூர்

திரு வேங்கட நாதர்

அருளிச் செய்த

# கீதா சாரத் தாலாட்டு.



இது

திருப் பூவண மடாதிபதி

ஸ்ரீ காசிகாநந்த ஞாநாசார்ய

சுவாமிகளால்

பதிப்பிக்கப் பெற்றது.

# சிறப்புப் பாயிரம்.

மாதையர்கோன் வேதநவில் வாய்வேங் கடநாதன்,
காதையுறப்பார்த்தனுக்குக்கண்ணனருள்-கீதைக்,
கருத்துயர்தா லாட்டாகக் கட்டுரைத்தான் யாருங்,
கருத்துயர்தீர்ந் தெய்தக்க தி.

ஸ்ரீ கிருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:

# கீதா சாரத் தாலாட்டு.

காப்பு.

ஐவகைப் பொருளு நான்கு கரணமுங் குணங்கள் மூன்றுஞ், செய்வினை யிரண்டு மொன்றி யாவருந் திகைப்ப நின்ற, பொய்யிரு ளகல ஞானப் பொருட்கதிர் விரித்த புத்தேள், கைவள ராழிச் செங்கட் கண்ணனைக் கருத்துள் வைப்பாம்.

---

நூல்.

சீராரும் பரமார்த்த தெரிசநத்தை யருள் செய்யப், பேராருந் தேசிகனாய்ப் பெருமானே வந்தவரோ. 1

திருத்தேரிற் சாரதியாய்ச் சேர்ந்திருந்துங் கீதையினை, வருச்சுநற்கு மெய்ஞ்ஞான மனைத்து முரை செய்தவரோ. 2

செஞ்சமரிற் பந்துசனஞ் சேதம்வரு மென்றிரங்கி, யஞ்சினவன் பயந்தீர்த்தே யமர்செய்யச் சொன்னவரோ. 3

சுற்றிமறிற் சோகமெனச் சொல்லினைச் சற்றறிந்தவன்போற், கற்றுணர்ந்த போதனுற் கலங்கார்கா ணென்றவரோ. 4

கலங்காரோ விறப்புவரிற் கற்றுணர்ந்த பேரேனு, மலங்காம னிருக்கும் வகையுரையு மெனவினவ.

நீயுநா னும்புவிமே னிருபர்களு மெய்யுணர்வா, லாயுங்காற் பிறந்திறப்ப தார்க்குமில்லை யென்றவரோ. 6

ஈங்கெவர்க்கும் பிறந்திறப்ப தில்லையென்றீ ரிவ்வுலகி, னீங்குபவ மார்க்கிதனை நிச்சயமாய்ச் சொல்லுமென. 7

இத்தரையிற் பிறந்திருப்ப தெடுத்தவுடற் கடுத்தபொறி, நித்தியமா கியவான்மா நின்சொருப மென்றவரோ, 8

அங்கமுயி ரிந்தியநா னன்றிவே றெனைக்கா
ணே, னிங்கியான் வேறுண்டே லெனக்கறியப்
புகலுமென. 9

மெய்யுயிரிந் தியங்களல்லால் வேறறியே
னென்றவனைப், பையவவை யாலறியப் படானுநீ
யென்றவரோ. 10

தேகம்வே ருகிலதைச் சேர்ந்ததிவ ணேதெ
னவே, சோகமே வினைகருமத் தொடர்ச்சியினு
லென்றவரோ. 11

தேகமெடா முன்கருமச் செயல்வருமா றே
தெனவே, யேகமா மாரும்வித்து மெனுமுறை
போ லென்றவரோ. 12

காயமுந்தா னும்பிறிதேற் கன்மமெவர் செய்
ததெனத், தீயவுடற் கலதுகன்மச் செயறனக்கே
தென்றவரோ. 13

படர்கரும முடல்செய்யிற் பலமுறுவ தார்க்
கெனவே, யடர்பலமு முடற்கேயா மறிவாற்கே
தென்றவரோ. 14

வெய்யவினை யுடற்கென்றான் மெய்யிங்கே விழவாத்மா, வையமற நரகசொர்க்க மநுபவிப்ப தேதெனவே. 15

அநுபவமே யிலேயதுவீ ஞரோபி தநிகழ்த் திற், றநுகரணச் செயறனதாச் சார்வதுபோ லென்றவரோ. 16

மற்றுடலின் செய்கைதன்மேல் வருமயக்க மேதெனவே, முற்றுணர்வொன் றில்லாத மோக மென்று சொன்னவரோ. 17

அறிவுதே கந்தனக்கோ வாத்மாவிற் கோவெனவே, பிறிவுசெயி லசித்துடலம் பிரமமறி வென்றவரோ.

தேகமசித் தாகிலிந்தச் செயல்வருவ தேதெ னவே, யேகபரஞ் சோதியின்முன் னிருக்கையினு லென்றவரோ. 19

இருக்கினும சேதநத்துக் கிச்செயலுண் டோவெனவே, யுருக்குபடாக் காந்தமுன்னி லூசிநிக ரென்றவரோ. 20

சொன்னசெய லுடற்கானுற் சுகதுக்க மியார்க்கெனவே, யன்னசுக துக்கமுந்தா னவ்வு டற்கே யென்றவரோ. 21

சேதநமா மாந்மாவைச் சேராத துக்கசுக, மோதுசட மாமுடலை யுற்றிடுமோ சொல்லுமென

பூதமைந்தோ டைந்துயிர்கள் புலன்கள்பத்து மநமுதனுன், கீதிருமெ யிதின்மநத்துக் கின்ப துன்ப மென்றவரோ. 23

இந்தவிரு வகைத்தநூவிற் கேதுவே தென வினவ, முந்தியகா ரணமதனுன் மூன்றுதநு வென்றவரோ. 24

மநமறியுந் துக்கசுக வரவென்றீ ரம்மநமும், வினவிலசே தநமலவோ விரித்தெனக்கு விளம்பு மென. 25

அம்மநத்தி லாந்மா வபேதம்போற் றோன்று தலால், விம்முதுக்க சுகத்தைமந மேவுமென்று சொன்னவரோ. 26

அந்தமனோ துக்கசுக மதனிடத்து நில்லாமல், வந்திலங்கு மாந்மாவை மருவியதென் சொல்லுமென. 27

வெய்யகன லின்சூடு மேல்வைத்த சட்டியினா, டுய்யபுன லூடுவந்தங் கொன்றுதல்போ லென்றவரோ. 28

சித்தாகு மாந்மாவுஞ் செடமாகுஞ் சித்தமுந் தா, னைத்தாங்கி ரண்டுமொன்று யுற்றவகை சாற்றுமென. 29

வல்லிரும்பு கனலுடனே மருவியது போன் மநமு, மொல்லையிலாந் மாவுடனே யுற்றதுகா ணென்றவரோ. 30

உற்றதெத னலெனவே யுள்ளமவி வேகமுறப், பற்றியதன் மேலுமதன் பண்புவந்த தென்றவரோ. 31

அடுத்தகுணம் போமோபின் னாந்மாவை விட்டெனவே, யெடுத்தசெம்பூ நிறம்படிகத் தேறுதல்போ லென்றவரோ. 32

சுத்தபடி கம்போற்சொ ரூபமாய்த் தானி
ருக்க, மெத்தவுமா சாமலிங மேவியதென் சொல்
லுமென. 33

அநாதியாம் வாசனையா லடைந்ததா சாம
லிங, மனோபந்த மிருக்கின்முத்தி வாராதென்
றுரைத்தவரோ. 34

பந்தமெது முத்தியெது பகுத்துரைக்க
வேண்டுமென்றன், சிந்தைதெ ளியவென்று
திருத்தாளி னைவணங்க. 35

தேகாதி தானெனவே சேரபிமா னங்கள்பந்த,
மாகாத மானம்விடி லரியமுத்தி யென்றவரோ. 36

அபிமானம் வரும்வகையு மாங்கதனைத் தீர்வகையுந்
தபியாம னறியத் தயவாகக் கூறுமென. 37

மறந்திடுமஞ் ஞானத்தான் மானம்வந்த தஞ்
ஞான, மிறந்துவிடின் மானமும்போ மென்னவுரை
செய்தவரோ. 38

அந்தமுறை யஞ்ஞான மணுகுவதும் போவதுவுஞ்,
சந்தயமி லாதறியத் தயவாகக் கூறுமென. 39

அஞ்ஞானம் வந்தத நாதியது சொல்வதல்ல,
மெய்ஞ்ஞானத் தாலேவி டுமென்று ரைத்தவரோ

இரவியெதி ரடுத்துவந்த விருட்போல வஞ்ஞானம், வரவிதியோ சோதிதன்பால் வந்தவகையேதெனவே. 41

அந்தவறி வுவந்தா லஞ்ஞான மில்லையப்பாற்,
சந்ததமு மானந்த சாகரங்கா ணென்றவரோ. 42

வேதாந்தத் தாற்குருவான் மெய்ஞ்ஞானம் வந்தவுடன், றீதான துக்கசுகந் தீராத தேதெனவே. 43

பற்றறுமோ துக்கசுகம் பரோட்சஞா நத்தாலே,
யற்றமா மவ்விரண்டு மபரோட்சத் தென்றவரோ

பரோட்சமப ரோட்சமெது பகுத்துரைக்க வேண்டுமென்றன், றிதோதமாம் புத்திநன்குத் தெளியும்ப டிக்கெனவே. 45

பகர்ந்தசத்த ஞானம்ப ரோட்சம நுபவத்தா,
லகம்பிரம மெனுஞான மபரோட்ச மென்றவரோ.

தான்பிரம மென்றறிந்துந் தநுவைத்தா
னென்றபுத்தி, யேன்போக வில்லையதை யெனக்
கறியப் புகலுமென. 47

கேள்வியினுன் மநநத்தாற் கிளர்ந்தயோ கங்
களினு, லாள்பிரமத் தநுபவம்வந் ததுதீரு மென்
றவரோ. 48

ஆதியாஞ் சிற்சொருப மாகாத தானினிமேற்,
சோதிமந நாதியினுற் சொரூபமா மோவெனவே.

எப்போதுஞ் சிந்மயந்தா னெனன்மறந்து
தேடுவது, செப்புமிடற் றணியிருக்கத் தேடுதல்
போ லென்றவரோ. 50

தேடியபின் றேகபுத்தி தீர்ந்துபோய்ச் சிற்
சொரூபங், கூடுவனோ யானென் குறைதீரச்
சொல்லுமென. 51

வந்தவுடல் வேறாயும் வாசனையாற் ருனென
லாற், சந்தயமென் றற்சொருபந் தாணுதற் கென்
றவரோ.

தநுவைத்தா னெனும்பிரமை சத்தஞா நத்திலறு, தநுபவமெய்ஞ் ஞாநத்தா றலும்வகையே துரையுமென. 53

விளக்குவிளக் கெனுமதனுல் வெய்யவிருள் போய்விடுமோ, துளக்கமிலா விளக்கேற்றிற் றொலையுமிரு ளென்றவரோ. 54

நெடுங்கால மாந்மாவை நீங்காத வஞ்ஞாநம், விடுங்கால மெந்நாளோ மெஞ்ஞாநத் தாலெனவே. 55

அந்தகா ரங்குகையி லாயிரநா ளிருந்தாலுஞ், செந்தீபங் கண்டவுடன் றீர்வதுபோ லென்றவரோ. 56

கருமயோ கந்தவமே காரணமா நீங்காம, லருமையா ஞாநம்வந்தோ வஞ்ஞாநம் போமெனவே. 57

குத்துவெட்டும் படைகளினுற் கூடுமோ விருடோக்க, வுத்தமமாம் ரவியுதித்தா லோடுமிரு ளென்றவரோ. 58

அஞ்ஞாந விருடேக்க வறியாத நல்லகன்ம, மெய்ஞ்ஞாலந் தனைப்பரிக்கும் விதமெவ்வா றென வினவ. 59

இந்திரஜா லம்போல விவ்வுலகை நம்மிடத் திற், றந்திரமாத் தோற்றுவித்தோஞ் சத்யமல வென்றவரோ. 60

மித்தையெனுஞ் சகத்துநின்பால் விளக்கு மோ வெனவினவ, சுத்திதனி லேரஜதந் தோன் றுதல்போ லென்றவரோ. 61

அயல்வெள்ளி சுத்தியின்மே லாரோபி தங் கூடு, மியலுள்ள சகமுமுன்வே றிருந்ததுமுண் டோவெனவே. 63

மநமயக்கம் பிடிக்கிலில்லா வத்துவுந்தோன் றிடுமதுவோ, கநவில்விண்ணிற் றுன்பறக்கக் கண்டதுபோ லென்றவரோ. 63

கநவுபோற்ப்ர பஞ்சமென்றீர் கண்விழித் தாற் கநவுபொய்யாம், வினவுசகந் திநமுமெய்யா விளங்குவதென் சொல்லுமென. 64

மெய்யாக விளங்குவது மெய்ஞ்ஞானம் வருமளவும், பொய்யாம்பின் கனவதுபோற் போதம்வரி லென்றவரோ, 65

முன்புகண்ட கனவுபொய்யா முழிசாக்ரம் போலவென்றீர், பின்புமுத்தித் தசையடைந்தும் ப்ரபஞ்சநிற்ப தேதெனவே. 66

தெரிந்தவர்க்குத் தோற்றுவது தெத்தபடம் போல்வதல்லாற், பாந்தசகங் காரியத்திற் பயன் படா தென்றவரோ. 67

கன்மவினை யஞ்ஞானங் கடந்துமதன் காரியமாம்,
புன்மையுறு மெய்யுடனே போகாத தேதெனவே.

வெட்டவிழு மரம்பசந்து விளங்குதல்போற் சிலகால, நட்டகன்ம மாய்ந்துமங்க நடித்திடுங்கா ணென்றவரோ. 69

சென்மம்போய் முத்தியினைச் சேரச்சி லரிருக்கத்,
தொன்மையாங் மாபலவோ சொரூபம் பகருமென-

பிரமமென்று மீசனென்றும் பெருகுபல சீவரென்று, முறைமயக்க மலதாத்மா வொருவனே யென்றவரோ. 71

ஏகந்தா னாத்மா வெனும்வகையே மெய்யானு, லாகந்தோ றும்பலவா யமர்ந்ததென்றே சொல்லுமென. 72

பலகடத்திற் சலத்தூடு பானுவிம்பந் தோன்றுதல்போற், றொலைவில்புத்தி தொறுமாத்மாத் தோன்றுதல்கா ணென்றவரோ. 73

ஆதித்தன் போலாத்மா வளவில்புத்தி தொறுந்தோன்றிற், சாதிக்கு முத்தியெவர் தமக்கதனைச் சாற்றுமென. 74

பந்தமுத்தி தானுமந்தப் பாந்தபுத்தி தனக்கேயா, மந்தவிம்பந் தனக்கிலையென் றறிவுவரச் சொன்னவரோ. 75

பரமேக மாயுமதிற் பலசீவ ரேதெனவே, யொருகடலிற் பலகுமிழி யுதிப்பதுபோ லென்றவரோ. 76

சீவனது தானென்றுஞ் சேரும்பி ரமமென்று, மாவதுவோ பேரின்ப மாங்கதெனக் கோது மென. 77

ஏகம்பி ரமமி ரண்டிலை வேறுமல, சோக முறும் பேதமறிற் றேன்றுமின்ப மென்றவரோ.

சீவபே தம்போமோ சித்தொன்று மோவெனவே, யாவன்மந மறுஞ்சுழுத்தி யவத்தையிற்பா ரென்றவரோ. 79

பேதமல விவ்வுலகம் பிரமமய மென்றறிந்தும், பூதமய மாய்த்தோற்றல் போகாத தேதெனவே.

கானலை ரென்றோடிக் கண்டவர்க்குத் தீர்ந்தபின்னும், வானுலவு நீராகி வயங்குதல்போ லென்றவரோ. 81

அறிவானு நல்லறிவு மறியப்ப டும்பொருளும், பிறிவாய்மூன் றுயிருத்தல் பேதமல வோவெனவே

சொப்பநத்திற் றனித்தொருவன் றோற்றம் வே றில்லையங்கே, கற்பனையாம் பொருளறிவு காண்பவன்போ லென்றவரோ. 83

கற்பனையாம் பேதங்கள் காணுமற் போம்வகையை
விற்பநமா நானறிய விளம்புமென வேவணங்க. 84

துரியமாம் யோகத்தாற் றூயமநம் லயமானு,
லரியமூ வகைவிகற்ப மழியுமென்று சொன்னவ
ரோ. 85

சிறந்திருக்கு மாந்மாவுஞ் செகமெல்லா
நிறைந்திருந்து, மறைந்தெனக்குத் தோன்றுத
வகையேது சொல்லுமென. 86

சத்துச்சித் தாநந்தந் தாமூன்று மதனுடனே,
யொத்துற்று நாமவுருவஞ்ச கமாகி. 87

இருக்கையினிற் றேற்று திவைமூன்றும்
பிரமமென, மரிக்கில்வரும் பின்னிரண்டு மறிசக
மென் றுரைத்தவரோ. 88

அறிந்துகொண்ஞா நத்தாலே யாந்மாவை
யென்றுரைத்தீர், சிறந்தொளிரு மாந்மாவுந் திரு
சியமா மோவெனவே. 89

முந்தியஞா நத்தாலே முதிருமஞ்ஞா நந்து
ரக்கிற், சிந்தையிலாங் மாச்சுயமாய்த் திகழு
மென்று சொன்னவரோ. 90

இனியமுத்திச் சுகமிருப்ப தெப்படியென் றேவினவ, வநுபவத்தி லறிவிடயா நந்தம்போ லென்றவரோ. 91

மநலயம்வந் தவாலது மற்றிலரோ முத்தரெ னச், சநகனைப்போற் சீவந்முத்தர் தாமுமுள ரென்றவரோ. 92

சீவந்முத்தி யடைந்தோர்கள் செயலுமவர் தங்குணமு, நாவுரைக்கும் வாசகமு நானறியச் சொல்லுமென. 93

வருங்கருவு பிறப்பினொடு வளர்தல்பருத் தல்குறைத, லொருங்கலுமெய்க் கென்றதனை யொருத்திருப்பா ரென்றவரோ. 94

பார்ப்பதுவுங் கேட்பதுவும் பகர்வதுவுஞ் சொல்வதுவு, மேற்பதுவுங் கரணதன்ம மெனத் துணிவா ரென்றவரோ. 95

பசிதாக முயிர்க்கெனவே பயந்துக்கஞ் சுகங் காமம், வசிகோப மதிக்கெனவே மகிழ்ந்திருப்பா ரென்றவரோ. 96

வீடுந்தா ரமுமுறவு மேவியென்று மிருந்தாலு,
நீடுந்தா மரையிலைநீர் நிகராவா ரென்றவரோ. 97

பற்றிடுங்கா யமுந்தானும் பன்னுளொன் றுயினும்பி, னுற்றபுளி யம்பழமு மோடுமொப்பா ரென்றவரோ. 98

கூறுமுல கியற்கையுடன் கூடினுமெய்ஞ் ஞானம்வந்தோர், சேறும்பிள்ளைப் பூச்சியும்போற் றிரிவார்கா ணென்றவரோ. 99

ததியூடு கடைந்தவெண்ணெய் தான்மோரிற் கிடப்பதுபோன், மதியோடு கூடினும்பின் மயங்கார்கா ணென்றவரோ. 100

அருச்சுனன்றன் பொருட்டாக வனைவருக்கு ஞானம்வரப், பொருந்தியதே சிகவடிவாம் புண்ணியரே கண்வளரீர். 101

ஆயர்குல மாத ரளவிலோ ரைப்புணர்ந்துந்,
தூயபதி னறு யிரவருடன் றோய்ந்திருந்தும். 102

பரமமுனி வர்முன்னே பரிச்சித்தைத் தீண்டி யன்று, பிரமசரி யஞ்செலுத்தும் பேரொளியே கண்வளரீர். 103

ஆதிமூ லம்விசயற் காதிமறை யின்பொருளை, யோதியு ணர்த்துமிந்த வுண்மைதனைக்—காதலுற் றுக், கற்ருேருங் கேட்டோருங் காசினியில் வாழ்ந் துமுத்தி, பெற்ருேர்கண் முத்தர்பெறும் பேறு.

கீதா சாரத் தாலாட்டு முற்றிற்று.



## கீதா சாரத் தாலாட்டு முதல் நினைப்பு

## கவி 106

பன் னிரு சீர்க் கழி நெடி லடி ஆசிரிய விருத்தம்.

ஆடிஜ மாதைசீர் திருசெஞ்ச சுற்றகல்
அணிநீயும் ஈங்இத்தரை - அங்கமெய் தேகதே
கங்காய படர்வெய்ய அறுமற்று அறிதேகம,
சேடிஇரு சொன்னசே தநபூத இந்தமன திகழ்
அம்ம அந்தவெய்ய - சித்தாவல் விருஉற்ற அடு
சுத்த படிஅநா தியாபந்த தேகாஅபி, சாடிமற
அந்தஅஞ் ஞா இரவி அந்தவே தாபற்ற பரோப
கர்ந்த - தான்கேள்வி ஆதிஎப் போதேடி வந்த
உடல் தறுவைவிள நெடுஅந்தகா, மேடிகரு
குத்துவெட் டஞ்ஞாந இருள்இந்தி மித்தையயல்
மநமகநவு - மெய்யாக முன்புகண் தெரிகன்ம
வினைவெட்ட விழுமெழுபத் தொடொன்றே. 1

## 22 சீதா சாரத் தாலாட்டு முதல் நினைப்பு.

காந்துசென் மம்பிரமம் என்றும்வ கம்பல கடஆதி பந்தபரமே - கம்சீவ ஏகம்பி சீவ பே தம்பேத கானலறி வாசொப்பநம், சீந்து கற் பனைதுரிய சிரந்திசத் இருக்கைஅறி முந்தி இனி யமுமநலயம் -சீவன்வரு பார்ப்பசி வீடு பற்றிடுகூறு ததியூடு அருச்ஆயர், போந்துபர மமுநிவர் ஆதிமூ லம்மிவை முப்பத்தைந் துஞ் சேரமுன்- புகலேழுபத் தோன்றேடு மோத்தம் நூற் றுறு கவியினித் தலைப்பிறலே, சாந்தமுறு சித்தமுடன் ஆதிமூ லம்விசயற் கோதியநன் மறைப்போருகடாம்- சார்கீதை யின்சார மாமிதனை மறவாமல் மன்னிப்போர் ஞாநியவர்.

முதல் நினைப்பு
முற்றுப்பெற்றது.

# கீதா சாரத் தாலாட்டு செய்யுள் **106.**

## முதற் குறிப்பு அகராதி.


| | | | |
|---|---|---|---|
| அங்கமுயிர் | 5 | ஆதிமூலம் | 20 |
| அஞ்ஞானம் வந்த | 10 | ஆதியாம் | 11 |
| அஞ்ஞான விருடு | 13 | ஆயர்குல மாதர் | 19 |
| அடுத்தகுணம் | 8 | இத்தரையிற் | 4 |
| அநாதியாம் | 9 | இந்தவிரு வகை | 7 |
| அநுபவமே யில்லை | 6 | இந்திரஜா லம் | 13 |
| அந்தகா ரங்குகையில் | 12 | இரவியெதிர் | 10 |
| அந்தமனோ | 8 | இருக்கினும | 6 |
| அந்தமுறை | 9 | இருக்கையினில் | 17 |
| அந்த வறிவுவந்தால் | 10 | இனியமுத்தி | 18 |
| அபிமானம் | 9 | ஈங்கெவர்க்கும் | 4 |
| அம்மனத்தில் | 7 | உற்றதெத ஞலெ | 8 |
| அயல்வெள்ளி | 13 | எப்பொழுதுஞ் | 11 |
| அருச்சுனன் றன் | 19 | ஏகாந்தா ஞந்மா | 15 |
| அறிந்துகொண்ஞா | 17 | ஏகம் பிரமம் | 16 |
| அறிவானு | 16 | ஐவகைப் பொருளு | 3 |
| அறிவுதே கந்தனக் | 6 | கநவுபோற் | 13 |
| ஆதித்தன் | 15 | கருமயோ கந் | 12 |

| | | | |
|---|---|---|---|
| கலங்காரோ | 17 | சேதநமாம் | 7 |
| கற்பனையாம் | 17 | சொன்னசெயல் | 7 |
| கன்மவினை | 14 | சொப்பநத்திற் | 16 |
| காயமுந்தா னும் | 5 | ததியூடு கடைந்த | 19 |
| கானலைநீ ரென் | 16 | தறுவைத்தான் | 12 |
| குத்துவெட்டும் | 12 | தான்பிரமம் | 11 |
| கூறுமுல கியற்கை | 19 | திருத்தேரிற் | 13 |
| கேள்வியினால் | 11 | துரியமாம் யோகத் | 17 |
| சத்துச்சித் தாநந்தம் | 17 | தெரிந்தவற்குத் | 14 |
| சித்தாகு மாந்மாவும் | 8 | தேகமசித் தாகிலிந்த | 6 |
| சிறந்திருக்கு மாந்மா | 17 | தேகமெடா முன் | 5 |
| சீராரும் பரமார்த்த | 3 | தேகம்வே றாகில | 5 |
| சீவபே தம்போமோ | 16 | தேகாதி தானெ | 9 |
| சீவந்முத்தி | 18 | தேடியபின் | 11 |
| சீவனது தா | 16 | நீயுநா னும் | 4 |
| சுத்தபடி கம் | 9 | நெடுங்கால | 12 |
| சுற்றமறிற் | 4 | பகர்ந்தசத்த ஞாநம் | 10 |
| செஞ்சமரிற் | 4 | பசிதாக முயிர்க் | 18 |
| செந்மம்போய் | 14 | படர்கரும முடல் | 5 |

| | |
|---|---|
| பந்தமுத்தி தானு | 15 |
| பந்தமெது | 9 |
| பலகடத்திற் | 15 |
| பரமமுநி வர் | 20 |
| பரமேக மாயு | 15 |
| பரோக்ஷமப ரோ | 10 |
| பற்றறுமோ | 10 |
| பற்றிடுங்கா ய | 19 |
| பார்ப்பதுவுங் | 18 |
| பிரமமென்று | 15 |
| பூதமைந்தோ ட | 7 |
| பேதமல விவ்வுலகம் | 19 |
| மநமறியுங் | 7 |
| மநமக்கம் பிடி | 13 |
| மநலயம்வந் தவர | 18 |
| மறந்திடுமஞ் ஞாந | 9 |
| மற்றுடலின் | 6 |
| மாதையர் | 2 |
| மித்தையெனும் | 13 |
| முந்தியஞா நத்தாலே | 17 |
| முன்புகண்ட | 14 |
| மெய்யாக விளங்கு | 14 |
| மெய்யுயிரிந் திய | 5 |
| வந்தவுடல் வேறாயும் | 11 |
| வல்லிரும்பு | 8 |
| வருங்கருவு | 18 |
| விளக்குவிளக் கெனு | 12 |
| வீடுந்தா ரமுமுறவு | 19 |
| வெட்டவிழு | 14 |
| வெய்யகன வின் | 8 |
| வெய்யவினை | 6 |
| வேதாந்தத் தாற் | 10 |
| | —— |
| ஆகச் செய்யுள் | 106 |

